இளவரசு.

# THE HEIR-APPARENT:

BEING A BRIEF ACCOUNT

OF THE

## LIFE OF HIS ROYAL HIGHNESS ALBERT EDWARD, PRINCE OF WALES

BY

MRS. BAUBOO,

FREE CHURCH OF SCOTLAND MISSION, MADRAS.

Madras.
SATTHIA THEEPAM PRESS,
1875.

923.142
3687

7

87/1-76 3687 3

# இளவரசு.



ஹிஸ் ராயல் ஹைனெஸ் தி ப்ரின்ஸ் ஆவ் உவேல்ஸ்.

நம்முடைய காருணிய இராணியாரவர்கள் ஜேஷ்ட புத்திரரும் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் இளவரசுமாகிய ஹிஸ் ராயல் ஹைனெஸ் ஆல்பெர்ட் எட்வர்ட், ப்ரின்ஸ் ஆவ் உவேல்ஸ் இந்தநகரத்திற்கு விஜயஞ்செய்து பவனிவரும் சுபதினத்தில் ராஜதரிசனை செய்ய விரும்புகிற பிரஜைகள் பலரும் அவருடைய பிரதாபத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவார்களாகையால், அதனை இந்தச் சிறுபுத்தகத்தில் ஒருவாறு எடுத்துரைக்க விரும்புகிறோம்.

இந்த ராஜகுமாரன் 1841 ம் வூ, நவம்பர்மீ 9ம்டூ, செவ்வாய்க்கிழமை பகல் 11 மணி அடிக்க 12 நிமிஷ மிருக்கையில், லண்டன் நகரத்திலுள்ள பக்கிங்ஹாம் மாளிகையில் பிறந்தார். அன்று காலையில் 7 மணிக்கு மஹா இராணியாரவர்கள் பிரசவவேதனைப்படுகிற செய்தி தெரிந்தவுடனே, அவர்களுடைய தாயாரும், ப்ரிவிகௌன்ஸில் என்னும் மந்திராலோசனை சபையைச்சேர்ந்த கனவான்களில் ட்யூக் ஆவ் வெலிங்டன், ட்யூக் ஆவ் பக்கிங்ஹாம், அர்ல் ஆவ் ஆபர்டீன் முதலிய பல பிரபுக்களும், வைத்தியத்தில் வல்லவர்களாகிய பல பண்டிதர்களும் மருத்துவர்களும் வந்து மிகுந்த கவலையோடு கட்டிக் காத்துக்கொண்டிருந்தார்கள். மஹா இராணியாரவர்கள் பிரசவித்தவுடனே லில்லி என்னும் மருத்துவச்சி பிள்ளையை எடுத்துக்கொண்டுவந்து கூடிவந்திருந்த கனவான்களுக்குக் காண்பித்தாள். உடனே அவர்கள் இந்தச் சந்தோஷசமாசாரத்தை பிரங்கி வெடிகள் போட்டு லண்டன் நகரவாசிகளனைவருக்கும் பிரசித்தப் படுத்தினார்கள். அந்நகர விசாரணைசபையைச் சேர்ந்த லார்ட் மேயர் முதலிய பிரபுக்கள் வெகு ஆடம்பரத்தோடு புறப்பட்டுவந்து மஹா இராணியாரவர்களுடைய க்ஷேமத்தையும், ராஜகுமாரனுடைய க்ஷேமத்தையும் விசாரித்தார்கள். மந்திராலோசனை சபையாரும் ஒயிட் ஹால் என்னும் சபாமண்டபத்தில் கூடிவந்து, தேவன் தாயையும் பிள்ளையையும் க்ஷேமமாகக் காப்பாற்றி ப்ரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு நன்மைசெய்ததற்காக, அவரை, அடுத்த ஆதிவாரம் ஆலயங்கள்தோறும் ஸ்தோத்திரஞ் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டார்கள். அவ்வாறே அந்த ஆதிவாரம் ஆலயங்கள் தோறும் "ஓ! இரக்கமுள்ள தேவனே, எங்கள் காருணிய இராணியாராகிய உமது அடியாளுக்கு புத்திரபாக்கியத்தை அளித்து, பிரசவகாலத்து ஆபத்துகளிலிருந்து காத்து ரக்ஷித்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம்; உமது அடியாளுக்கு வேண்டிய பலத்தையும் சுகத்தையும் கட்டளையிடும்; பாலகனாகிய எங்கள் ராஜகுமாரனுக்குத் தீர்க்காயுசை அளித்து, அவர் இங்

தத்தேசத்திற்கும், இந்த உலகத்திற்கும் நன்மைசெய்யும் கருவியாயிருக்கும்படிக் கிருபைசெய்தருளவேண்டும்" என்று பலவாருகப் பிரார்த்தனைகள் செய்யப்பட்டது.

ஒரு மாதத்திற்குப் பிறகு மஹா இராணியாரவர்கள் இந்த ராஜகுமாரனுக்கு ப்ரின்ஸ் ஆவ் உவேல்ஸ் என்னும் பட்டம் சூட்டி, பொறகிரீடம், கத்தி, கணையாழி, செங்கோல் முதலிய கௌரவ சின்னங்களையும் தரித்து, ப்ரிட்டிஷ் ராஜபுத்திரனுகிய எங்கள் அருமைக் குமாரனை உவேல்ஸ் நாட்டின் காவலனுகச்செய்திருக்கிறேம் என்று விளம்பரம் சாற்றுவித்தார்கள்.

மஹா இராணியாரவர்கள் தாம் அடைந்த சந்துஷ்டிக்கு அடையாளமாகத் தமது ராஜாங்கத்தைச் சேர்ந்த ராணுவவீரர்முதலிய உத்தியோகஸ்தர்களுக்கும் உயர்வான உத்தியோகங்களை நியமனஞ்செய்து சன்மானித்தார்கள்.

1842 ம் ௵ ஜனுவரி ௴ 25 ௳ விண்ட்ஸர் மாளிகையைச் சேர்ந்த தேவாலயத்தில் இந்த ராஜகுமாரனுக்கு பாப்டிஸம் என்னும் கிறிஸ்து மார்க்க பிரவேச சடங்கு வெகு சம்பிரமமாய் நிறைவேறிய போது, இவருக்கு ஆல்பெர்ட் எட்வர்ட் என்று நாமகரணமும் செய்யப்பட்டது. அன்று மஹா இராணியாரவர்கள் தேவாலயத்தைவிட்டு தமது அரண்மனையிலுள்ள சபாமண்டபத்திற்குப் போய்ச் சேர்ந்தவுடனே, இந்தச் சுபகாரியங்களுக்குத் தொலைதூரங்களிலிருந்து வந்திருந்த அனேக ராஜர்களுக்கும், ராஜர்களுடைய ராஜபதிகளுக்கும், அவரவர்களுடைய அந்தஸ்துக்குத் தகுந்தபடி, கௌரவப்பட்டங்கள் சூட்டி, சிறந்தவிருந்துசெய்து உபசரித்தார்கள்.

இந்த ராஜகுமாரன் பிறந்த சில மாதங்கள் பொறுத்து பார்லிமெண்ட் என்னும் மஹா சபை கூடியபோது, மஹா இராணியாரவர்கள் சபையாரை நோக்கி "எனது இல்வாழ்க்கையின் இன்பத்தைச் சம்பூரணப்படுத்தத் தக்க புத்திர பாக்கியம் கிடைத்ததற்காகத் தேவனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரங்களை

உங்கள்சமுகத்தில் பிரசித்தமாய்ச் செலுத்தவேண்டியது என் கடமை என்று உணருகிறேன்'' எனத் தெரிவித்தார்கள்.

மஹா இராணியாரவர்களும் அவர்கள் பிராணநாயகரும் இந்தராஜகுமாரனை குழந்தையாயிருக்கும்போதே லேடி லிட்டில்டன் என்னும் சீமாட்டியின் வசத்தில் ஒப்புவித்து, நல்லொழுக்கங்களைப் பயிற்றுவித்தார்கள். சிறுபிராயத்திலேயே ஆண்பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கவேண்டிய வித்தைகள் பலவற்றையும் இவர்களுக்குச் சொல்லுவித்தார்கள். சரீரத்தைக் கஷ்டத்தில் வைக்கவும், மனதை சத்விஷயங்களில் செல்லும்படிச்செய்யவும் பழக்குவித்தார்கள். அதிபாலியத்திலேயே இவர்கள் தடாகத்தில் குளித்து நீந்தவும், மீன் முதலியவற்றைப் பிடிக்கவும், அடர்ந்த வனங்களில் நுழைந்து மான் முதலியவற்றை வேட்டையாடவும், கப்பலேறி நிர்ப்பயமாய் யாத்திரை செய்யவும் பயின்றுவந்தார்கள். ஏழுவயதில் செங்குத்தான மலைகளின்மேல் வெகுதுணிவாய் தாம் ஏறுவதுமல்லாமல், தாயாரையும் கைகொடுத்து நடத்திக்கொண்டுபோனதாயும் சொல்லுகிறார்கள். இவர்கள் பொழுதுபோக்கப் பல விநோதவித்தைகளைக் கற்றிருந்தபோதிலும், வேட்டையாடுவதிலேயே இவர்களுக்கு விசேஷ பிரீதி. பற்றியெரிகிற நெருப்பை அவிக்கிறதிலும் இவர்கள் வெகு சமர்த்தராம். லண்டன் நகரத்தில் அக்கினியினால் அபாயம் நேரிடுகிற தருணங்களில் இவர்வெகுசுறுக்காய் வேலைசெய்து உதவுகிறதை ஜனங்கள் பலமுறை பார்த்திருக்கிறார்கள். இவர்கள் வாசஞ்செய்கிற மார்ல்பரோ ஹௌஸ் என்னும் அரண்மனை சிலநாள்களுக்கு முன்தீபற்றினபோது, நெருப்பை அவிக்கும் இயந்திரங்கள் வருமுன்னே இவர்கள் செய்த முயற்சிகளினாலேயே அக்கினிதணிந்துபோனதாய்ச் சொல்லுகிறார்கள்.

வித்தியாவிஷயத்திலும் இவர் சாமானியரல்லர். பாலியத்தில் ஹென்றி பர்ச், கிப்ஸ், டர்னர், பிஷர் என்னும் நான்கு வித்வான்களிடத்தில் கல்விகற்று, ஸ்காட்லண்ட் தேசத்திற்

ருப்போய், எடின்பரோ நகரத்திலுள்ள கல்விச்சாலையிற் சேர்ந்து ஒருவருஷம் படித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு ஆக்ஸ்போர்ட் கலாசாலையிற்சேர்ந்து, அங்கொரு வருஷம் வாசித்துக்கொண்டுவந்தார்கள். கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் "மெட்ரிகுலேஷன்" என்னும் பிரவேசபரிக்ஷை கொடுத்து, நான்குவருஷம் வித்தியாப்பியாசம்செய்துகொண்டு வந்தார்கள். இந்தக்கல்விச்சாலைகளில் இவர்கள் படித்துக்கொண்டுவரும்போது இவர்களுடைய நல்லொழுக்கத்தையும், வித்தியா விஷயத்தில் இவர்கள் செய்த முயற்சியையும் பார்த்தவர்கள் வியப்புற்று மெச்சுகிறார்கள். கலாசாலைகளில் கல்வித்தேர்ச்சி அடைந்தவர்களுக்குஞ் சாதாரணமாய்க் கொடுக்கப்படுகிற பட்டங்களை இவர்கள் அடைந்ததுமல்லாமல், ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் டி. சி. எல். என்னும் நியாய சாஸ்திரபட்டத்தையும், கேம்ரிட்ஜ் சர்வகலாசாலையிலும், டப்ளின் சர்வகலாசாலையிலும் கலைக்கியான விற்பன்னன் என்று பொருள் கொடுக்கும் எல்.எல். டி. என்னும் பட்டத்தையும் பெற்றார்கள். மிடில் டெம்பில் என்னும் தர்மசாஸ்திர சாலையில் சில காலம் பயின்று, பாரிஸ்டர்-அட்-லா என்னும் நியாயவாதிகள் பட்டத்தையும் அடைந்தார்கள். வைத்திய சாஸ்திரத்தையும் கற்று, பண்டிதர்பட்டம்பெற்று, பார்த்தாலமியூ ஹாஸ்பிடல் என்னும் வைத்தியசாலைக்கு அக்கிராசனாதிபதியுமாயினார். இன்னும் இப்படிப் பல துறைகளில் பேர்பெற்றிருக்கின்றார்கள்.

இவர்கள் இவ்வாறு கல்விகேள்விகளில் சிறந்து மேன்மையடைந்தபிறகு, உலகத்தின்கண் கீர்த்திபெற்று விளங்கும் பல தேசங்களைப் போய்ப்பார்த்துவரும்படியாகத் தாய்தந்தையர்கள் இவர்களுக்கு உத்தரவுகொடுத்தார்கள். 1860 ம் ௵ அமெரிக்காகண்டத்திலுள்ள யூனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் ஐக்கிய மாகாணங்களையும், இங்கிலிஷ்காரர் ஆதீனத்திலிருக்கிற கானடாதேசத்தையும் போய்ப்பார்த்துவிட்டுவந்தார்கள்.

1861 ம் ௵ ஐரோப்பாக்கண்டத்திலுள்ள ப்ரான்ஸ், இடலி, ஸ்விடன், டென்மார்க், ப்ரஷியா முதலிய தேசங்களுக்குப் போய்ச் சிறிதுகாலம் சஞ்சாரம்பண்ணினார்கள். இடலிதேசத்திலுள்ள ரோமாபுரிக்குப் போனபோது, அங்கிருந்தவர்கள் ரோமாபுரியிலிருக்கிறவரையில் ரோமாபுரியில் செய்கிறவண்ணம் செய்யவேண்டும், ஆகையால் தாங்கள் சென்ட்பீட்டர் தேவாலயத்தில் நடக்கும் ஆராதனைக்குப்போகவேண்டுமென்றார்கள். அவர்கள் அது அசம்பிரதாயமான ஆசாரம் என்று உணர்ந்து, ரோமாபுரியிலிருந்தபோதிலும் எங்கள்வீட்டில் இருக்கிறபாவனையாகவே நடந்துகொள்வோம் என்று மறுமொழி உரைத்தார்கள். ஸ்விடன் தேசத்திற்குப்போனபோது ப்ரீமேஸன்ரீ என்னும் சகோதரர்க்கட்டுப்பாடுள்ள சங்கத்திற் சேர்ந்தார்கள். இங்கிலண்ட் தேசத்திலுள்ள ப்ரீமேஸன் கூட்டத்திற்கு கடந்த ஏப்ரல்மாதம் தலைவராகவும் ஏற்படுத்தப்பட்டார்கள்.

இவ்வாறு இவர்களை சுதேசத்திலும் பிறதேசத்திலும் படிப்பிக்கவேண்டியபடியெல்லாம் படிப்பித்தபிறகு, இவர்களுக்கு விவாகமஹோத்சவம்செய்து வைக்கவேண்டுமென்று தாய்தந்தையர்கள் உத்தேசித்து, அதற்குவேண்டிய பலபிரயத்தனங்களைச்செய்துகொண்டுவந்தார்கள். இப்படியிருக்கையில் 1861 ம் ௵ மார்ச்சிமாதம் மஹா இராணியாரவர்களுடைய அருமைத்தாயாரும், இந்த ராஜகுமாரனுடைய பாட்டியாருமாகிய டச்செஸ் ஆப் கென்ட் என்னும் பெருமாட்டி தேகவியோகமானார்கள். விபத்து வரும்போது ஒன்றாகவருகிறதில்லையென்னும் பழமொழிக்கிணங்க, அவ்வருஷத்தின் கடைசியில் இந்த ராஜகுமாரனுடைய அருமைத்தந்தையாரும் அறிவுக்கு எட்டாத தேவச்செயலினால், தேகவியோகமானார்கள். பிடித்த கொம்பும் ஒடிந்து, மிதித்தகொம்பும்முறிந்தாற்போல அருமைத் தாயையும் உயிருக்குயிராயிருந்த பிராணநாயகரையும் ஒரேவருஷத்தில் பறிகொடுத்து, மீளாத துக்கசாகரத்தில்

மூழ்கி, மகிமையங்கிநின்ற மஹா இராணியாரவர்கள் தமது குமாரனுடைய விவாகமஹோத்சவத்தைப்பற்றி இரண்டுவரு



ஹர் ராயல் ஹைனெஸ் தி ப்ரின்ஸஸ் ஆவ் உவேல்ஸ்.

ஷம் வரையில் மறுபடியும் நினைக்கவில்லை. இனிகாலதாம தமின்றி இதனை நிறைவேற்றிவைக்கவேண்டுமென்று மந்திரிப்

பிரதானிகள் ஆலோசனைசொல்ல, மஹாரா இராணியாரவர்கள்
அவர்களுடைய கருத்திற்கிணங்கி, தமது துக்கத்தைச்சிறிது
மறந்து, 1863 ம் ௵ மார்ச்சிமாதம் 10௳ தமதுகுமாரனு
டைய விவாகமஹோத்சவத்தை வெகு சிறப்பாகநிறைவேற்றி
வைத்தார்கள்.

இந்த ராஜகுமாரன் மணம்புரிந்த ராஜகன்னிகை டென்
மார்க்தேசத்தின் அதிபதியாகிய மஹாா ராஜாவின் ஜேஷ்ட
புத்திரி. இந்தப்பெருமாட்டியை அலெக்ஸாண்ட்ரா காரோலீ
ன் மெருயா ஷார்லெட் ஊயிஸா ஜூலியா என்று சொல்லு
வார்கள். இவர்கள் 1844 ம் ௵ டிசம்பர்மாதம் 1௳ பிறந்
தவர்கள். ரூபத்திலும் குணத்திலும் இவர்களுக்கு நிகரான
வர்கள் கிடைப்பது அரிது. இவர்கள் நம்முடைய காருணிய
இராணியாரவர்கள் மனதுக்கு இசைந்த மருமகள். மஹாரா
இராணியாரவர்கள் குடிகளுக்கும் இவர்களிடத்தில் அத்திய
ந்த பிரீதி. இவர்களுடையபடத்தை மேலே பதித்திருக்கிறோ
ம். இவர்களுக்கு தேவானுக்கிரகத்தினால் புத்திரபாக்கியமும்
குறைவில்லாமல் உண்டாயிருக்கின்றது:—

1864 ௵ ஆல்பெர்ட் விக்டர் என்னும் குமாரனும்,
1865 ௵ ஜார்ஜ் ப்ரொடரிக் என்னும் குமாரனும்,
1867 ௵ ஊயிசா விக்டோரியா என்னும் குமாரத்தியும்,
1868 ௵ விக்டோரியா அலெக்ஸாண்ட்ரா என்னும்குமாரத்
1869 ௵ மாட் ஷார்லெட் என்னும் குமாரத்தியும், [தியும்,
1871 ௵ அலெக்ஸாண்டர் ஜான் என்னும் குமாரனும்,

பிறந்தார்கள். இவர்கள் ஆறுபெயரும் வெகு சௌந்தரிய
முள்ளவர்கள். தாய்தந்தையர்கள் பெயரையும், இங்கிலிஷ்
ராஜகுடும்பத்தின் பெயரையும் முன்னுக்குக் கொண்டுவரத்த
க்க குணதிசயங்களையும் உடையவர்களாம். இவர்களில் ஜே
ஷ்டனாகிய ஆல்பெர்ட் விக்டர் என்னும் ராஜகுமாரனுடைய
படம் அடுத்தபக்கத்தில் பதித்திருக்கிறது.

இப்படி இந்த ராஜகுமாரன் சகல சாம்பிராஜ்ஜியத்தை
யும் குறைவறப் பெற்றுச் சீமானாய் வாழ்ந்துவரும்போது,



ஹிஸ் ராயல் ஹைனெஸ் ஆல்பெர்ட் விக்டர்.

இவர்கள் பிதாவுக்குக்கண்ட விஷஜுரமே 1871ம் ௵ டிசம்
பர்மீ இவர்களுக்கும் கண்டு, இனியேதென்று போய்விட்டது.

வைத்தியர்களெல்லாம் இவர்கள் பிழைக்கிறது அரிதென்று நிமிஷத்துக்கு நிமிஷம் கெடுவிட்டுக்கொண்டிருந்தார்கள். பட்டத்துக்குமாரராகிய இந்த ராஜபுத்திரருக்கு உண்டான பிராணசங்கடத்தையுணர்ந்த பிரிட்டிஷ் குடிகள்யாவரும் நடுக்கமுற்று, தேவனை நோக்கித் தங்கள் இளவரசுக்கு தீர்க்காயுசு அளித்து காத்து ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டுவந்தார்கள். தேவனும் மிகவும் இரக்கமாய் இந்தப்பிரார்த்தனைகளைக் கேட்டருளினார். ஜுரம் நீங்கி ராஜகுமாரன் சொஸ்தமடைந்து எழுந்தவுடனே, மஹா இராணியாரவர்கள் தமது குடிஜனங்களுக்கு ஒரு திருமுகத்தைக் கட்டளையிட்டு, "எனது குடும்பத்துக்கும், ராஜ்ஜியத்துக்கும் பெரும்விபத்து நேரிடுகிறதாயிருந்தபோது, எனது குடிஜனங்கள் பாராட்டின அன்பையும், ராஜவிசுவாசத்தையும் நான் ஒருபொழுதும் மறக்கவேமாட்டேன். அவர்கள் நான் வருத்தப்படும்போது இவ்வாறு வருத்தப்பட்டது எனக்கு நூதனமானகாரியமல்ல. பத்துவருஷங்களுக்கு முன்னே இதே வியாதியினால் என்பிராணநாயகர் தேகவியோகமானபோதும் அவர்கள் எனக்காக இப்படியேவருத்தப்பட்டார்கள். இன்னும் அவர்கள் என் செல்வப்புத்திரன் முழுமையும் சொஸ்தமடைந்து எழுந்திருக்கும்படியாகத் தேவன் கட்டளையிடவேண்டுமென்று பிரார்த்திப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்" என்று அறிவித்தார்கள். அப்படியே மிகுந்தபக்தியோடும் வைராக்கியத்தோடும் தேவாலயங்கள்தோறும் பிரார்த்தனைகள் செய்யப்பட்டுவந்தன.

இதற்குமுன் இந்த ராஜகுமாரனுக்கு எப்பொழுதும் நோய் வந்ததேயில்லை. இந்த விஷஜுரம் காணுவதற்குமுன்னே இவர்கள் இருந்தபாவனையை இந்தப்புத்தகத்தின் தலைப்பில் பதித்திருக்கிற படம் காண்பிக்கின்றது. இந்தப் படத்தைச் சித்திரித்தபோது இவர்களுக்கு நல்ல யௌவனபருவம். இப்பொழுது இவர்கள்தேகம் சற்று பருத்தும், தளர்ந்தும் காணப்ப

டும். அன்றியும் தாடி மீசை முதலியவை விசேஷமாய் வளர்ந்துமிருக்கும்.

இவர்கள் மஹா இராணியாரவர்கள் மந்திராலோசனைசபையில் ஒருவராயிருக்கிறதுமன்றி, ட்யூக் ஆவ் சாக்ஸனி, பிரின்ஸ் ஆவ் ஸாக்ஸ்கோபர்க், ட்யூக் ஆவ் காரன்வால், ட்யூக் ஆவ் ராத்ஸே, அர்ல் ஆவ் செஸ்டர், அர்ல் ஆவ் காரிக், அர்ல் ஆவ் டப்ளின், பாரன் ஆவ் ரென்ப்ரூ, லார்ட் ஆவ் தி அயில்ஸ், கிரேட் ஸ்ட்யூஅர்ட் ஆவ் ஸ்காட்லண்ட் என்னும் பட்டங்களையும், பட்டங்களுக்குரிய சுதந்தரங்களையும் பெற்று அனுபவித்து வருகிறார்கள். மேலும் நைட் ஆவ் தி கார்ட்டர், ஆர்டர் ஆவ்தி கோல்டன் ப்ளீஸ், ஆர்டர் ஆவ் தி டௌவர் அன்ட் திஸோர்ட், நைட் கிராண்ட் கமாண்டர் ஆவ் தி ஸ்டார் ஆவ் இண்டியா, நைட் ஆப் தி எலிபெண்ட் ஆவ் டென்மார்க், நைட் ஆவ் தி திஸில், என்னும் கௌரவபட்டங்களையும் பெற்று, லீஜன் ஆவ் ஆனர் என்னும் கௌரவசின்னத்தையும் தரித்துக் கொண்டிருக்கிறார்கள். 1858௵ தொடங்கி பிரிட்டிஷ் சைன்னியத்தில் பற்பல உத்தியோகங்களைச்செய்து, இவ்வருஷத்தின் தொடக்கத்தில் ப்ரிட்டிஷ்சேனைத்தலைவர்களில் ஒருவராகவும்நேமிக்கப்பட்டார்கள்.

இப்பொழுது இவர்கள் நம்முடைய தேசத்துக்குவந்தது நம்முடைய பாக்கியவசமே அன்றி வேறல்ல. நம்முடைய தேசத்தை வந்து பார்க்கவேண்டுமென்கிற ஆபேக்ஷை இவர்களுக்கு நெடுநாளாயுண்டு. மஹா இராணியாரவர்களுடைய இத்தேசத்துக் குடிஜனங்களின் வாழ்வு தாழ்வுகளை நேராகப் பார்த்தும் விசாரித்தும் இருந்தால், இந்தத்தேசத்துத் துரைத்தனகாரியங்களைப்பற்றி மஹா இராணியாரவர்களுக்கு யூகையோடு ஆலோசனைசொல்லும் திறமையுண்டாகும். இதற்காகவும், ப்ரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு உட்பட்டிருக்கிற பூமியின்கண் சிறந்தபாகமாகிய இந்தத்தேசத்தில் உண்டாயிருக்கிற விசித்திர விநோதங்களையும் பார்த்து, தேசாசாரத்தாலும் சமயா

சாரத்தாலும் இங்கிலீஷ்காரரோடு ஒற்றுமைப்பாடில்லாதவர்களாகிய இத்தேசத்து ஜனங்களையும், சிற்றரசர்களையும் தழுவிச்சேர்த்து, ஒருவரோடொருவர் சகோதரசம்பந்தம் கொண்டாடும்படித் தூண்டவுமே இத்தேசத்திற்கு விஜயம்செய்திருக்கின்றார்கள். இதற்கு நாம் எவ்வளவோ நன்றியறிதலுடையவர்களாயிருக்கவேண்டும். இவர்கள் கொண்ட பெரும்நோக்கங்கள் சித்திபெறவும், இத்தேசத்தில் உண்டாயிருக்கிற பலவகையான நோயநொடிகள் இவர்களைக்கிட்டாதிருக்கவும் தேவன் அனுக்கிரகம்செய்து காத்து ரக்ஷித்து, இப்பொழுது இவர்களைவிட்டுப்பிரிந்திருக்கிற மாக்ஷிமைபொருந்திய இவர்கள் குடும்பத்தார்மத்தியில் திரும்ப சுகமேபோய்ச்சேர்ந்து பல்லாண்டு பல்லாண்டாய் இன்புற்று வாழும்படி கிருபை செய்தருள்வீராகவென்று தேவனை நோக்கி நாம் ஒவ்வொருவரும் பிரார்த்திக்கவேண்டுமே.

116914

தே காக்க ப்ரின்ஸ் ஆவ் வேல்ஸ்.

# GOD BLESS THE PRINCE OF WALES

நங்தொன்மலையினின்றும்
நற்சாரலினின்றும்
ஸ்துதி மாறொலிக்கட்டும்
தே காக்க ப்ரின்ஸ் ஆவ் வேல்ஸ்
மனோவாக்கின் தாண்டல்கள்
மாண்பினர் ராகங்கள்
ப்ரிட்டன் பேரும் கீர்த்தியும்
பெரிதார்க்க வெங்கும்

பல்லவி—நங்தொன்மலை &c.

தே காக்க டேன் மகளை
சீர் வேந்தன் பாரியை
இங்கிலீஷ் டேனிஷ்கொடியே
இணைங்தோங்குகவே
அங்த ராஜ கன்னிகை
ஆனங்த வெறுக்கை
இருள் துக்க மேவற்க
எங்கோரிக்கை ஓங்க
ஸ்துதி மா றொலிக்கட்டும்
மலைச்சார லின்றும்
தே காக்கலெக்சாண்ட்ரா
தே காக்க ப்ரின்ஸ் ஆவ் வேல்ஸ்.

பல்லவி—நங்தொன்மலை, &c.